<u>**O.S.No. 232/2013**</u>

<u>**PW 1 : பாலசுப்பிரமணியம்**</u> தேதி 30.01.2026

<u>**வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 16 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனது சொந்த ஊர் பெருந்துறை. 2ம் பிரதிவாதி பாபுவின் ஊர் பல்லடம். தாவா சொத்துக்கும் எங்கள் ஊருக்கும் இடையே சுமார் 15 கி மீ இருக்கும் என்றால் 16 கி மீ இருக்கும். 2ம் பிரதிவாதியின் ஊருக்கும் தாவா சொத்திற்கும் இடையே சுமார் 50 கி மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல 30 கி மீ தூரம் இருக்கும். நாங்கள் இருவரும் தாவா சொத்திற்கு புதியவர்கள். நானும் 2ம் பிரதிவாதியும் 24.1.2008 ல் 5.5 ஏக்கரை கிரையம் வாங்கினோம். நான் கிரையம் வாங்கிய போது தாவா சொத்து யாருக்கு பாத்தியம் எந்த வகையில் பாத்தியம் என்று தெரிந்து வாங்கினேனா என்றால் தெரிந்து தான் வாங்கினேன். நான் கிரையம் வாங்கும் போது சீரங்க கவுண்டரும் 5ம் பிரதிவாதிக்கும் வழக்கு நடந்த விவரம் தெரிந்து தான் வாங்கினேனா என்றால் வழக்கு நடக்கும் விவரம் தெரியாது. அருகில் இருப்பவர்களிடம் சொத்து சம்மந்தமான விவரங்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். நீதிமன்ற வழக்கு உள்ள விவரத்தை யாரும் எனக்கு சொல்லவில்லை. சீரங்க கவுண்டரின் சொத்து என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சீரங்க கவுண்டருக்கு ஒரு மகன் இருப்பதும் தெரியும். அவருடைய மகனிடம் சொத்தை வாங்குவது சம்மந்தமாக கேட்டேனா என்றால் கேட்கவில்லை. அவரிடம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. சொத்தின் சுவாதீனம் நான் கிரையம் வாங்கிய காலத்தில் தங்கவேலிடம் தான் இருந்தது என்றால் ஸ்ரீராம் மற்றும் துரைசாமி ஆகியோரிடம் தான் இருந்தது. ஸ்ரீராம் மற்றும் துரைசாமியிடம் சொத்தின் சுவாதீனம் என்பதை காண்பிக்கும் வருவாய் துறை ஏதேனும் பார்த்தேனா

என்றால் பார்க்கவில்லை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய பிராதில் சீரங்க கவுண்டர் தங்கம்மாளுக்கு 27.6.88 மற்றும் 22.11.90 ஆகிய தேதிகளில் இரண்டு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்ததாகவும் அதற்கு தங்கவேலு ஒப்பு கொண்டதாகவும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். தங்கவேலு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுக்க ஒப்பு கொண்டதாக எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சீரங்க கவுண்டரின் சொந்த சொத்தை தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்ததால் அதை ஒப்புக்கொண்டு தங்கவேலு சாட்சி கையெழுத்திட்டுள்ளார். என்னுடைய பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து பூர்வீக சொத்து என்றும் தந்தை எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் தங்கவேலு சம்மதம் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. சீரங்க கவுண்டர் 1978 ல் சொத்தை எவ்வாறு வாங்கினார் என்று நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. சீரங்க கவுண்டர் ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ வ எண். 621/1991 அச்சொத்துகளை பூர்வீக சொத்து என்று ஒப்புக்கொண்டுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி வழக்கின் பிராது நகலை பார்த்தேனா என்றால் இல்லை அதன் தீர்ப்பு நகலை பார்த்தேன். அ வ எண் 621/1991 வழக்கை தங்கவேலு தான் தாக்கல் செய்திருந்தார். அதில் சீரங்க கவுண்டர் தங்கம்மாள் எதிர் தரப்பினர் என்றால் சரிதான். 621/91 வழக்கு பிராதில் தங்கவேலு சொத்துகளை பூர்வீக சொத்துகள் என்று சொல்லியிருக்கிறார் என்றால் அவ்வாறு தான் சொல்லியிருக்கிறார் ஆனால் அதை தவறு என்று சொல்கிறேன். அந்த பிராது அடிப்படையில் தங்கவேலு சொன்ன விவரங்கள் சரி என்பதால் தான் சீரங்க கவுண்டரும் தங்கம்மாளும் வழக்கை தோன்றா தரப்பினராக இருந்து வழக்கை ஒருதலைபட்ச உத்தரவிற்கு விட்டுவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை சீரங்க கவுண்டரும் தங்கம்மாளும் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது

எனக்கு தெரியாது. 621/91 ஏற்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் சொத்தை பிரித்து கொடுக்கும் படி இறுதி நிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான் பின்னிட்டு தெரிந்து கொண்டேன். இறுதி நிலை தீர்ப்பாணையின் நடவடிக்கையில் சீரங்க கவுண்டரும் கலந்து கொண்டாரா என்றால் இல்லை. என்னுடைய பிராதில் சீரங்க கவுண்டர் இறுதி நிலை தீர்ப்பாணையின் நடவடிக்கையில் கலந்து கொண்டார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 621/91 இறுதி நிலை தீர்ப்பாணையில் சீரங்க கவுண்டருக்கும் தங்கவேலுக்கும் சரிசமமாக பிரித்து கொடுத்து விட்டது என்றால் இந்த வழக்கின் சொத்திற்கு கொடுக்கவில்லை வேறு சர்வே எண்ணிற்கு தான் கொடுத்திருந்தார்கள். அந்த தீர்ப்பு இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்றால் நான் கிரையம் வாங்கிய இருக்கும் காலை எண் இறுதி நிலை தீர்ப்பாணையில் இல்லை. அதனால் தாவா சொத்திற்கும் அந்த இறுதி நிலை தீர்ப்பாணை சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு சம்மந்தப்படாத தீர்ப்பாணையை ரத்து செய்ய கோரி ஏன் பரிகாரம் கோரியிருக்கிறேன் என்றால் ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். நான் இறுதி நிலை தீர்ப்பாணையில் சொல்லியிருக்கும் சொத்திற்கும் இந்த வழக்கின் சொத்திற்கும் சம்மந்தம் இல்லாத நிலையில் மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்ய கோர முடியாது என்றால் சரியல்ல. சீரங்க கவுண்டர் பாதி சொத்தை தங்கம்மாளுக்கு 4.71 ஏக்கரை 22.11.1990 ல் 27.6.1988 லும் தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அவர் தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்ததற்கு பின்னிட்டு நான் சொல்லும் தாவா சொத்தில் சீரங்க கவுண்டருக்கு எந்த வித உரிமையும் பங்கும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அ வ எண்.621/91 வழக்கில் தங்கம்மாளை தரப்பினராக சேர்த்திருந்தார்கள் என்றால் சரியல்ல. வஞ்ச கூட்டாக சேர்ந்து கொண்டார்கள் என்று சொல்கிறேன். சீரங்க கவுண்டர்

இறுதி நிலை தீர்ப்பாணைக்கு பின்னிட்டு 7.12.2004 ல் எழுதி கொடுத்த தானசெட்டில்மென்ட் பத்திரமும் 7.1.2008 ல் எழுதி கொடுத்த கிரைய பத்திரமும் எனக்கு கொடுத்த கிரைய பத்திரமும் செல்லாது என்றும் அவ்வாறு ஆவணங்களை ஏற்படுத்த சீரங்க கவுண்டருக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் துரைசாமி மற்றும் ஸ்ரீராம் மற்றும் சீரங்க கவுண்டர் ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்ற கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் தாவா சொத்தில் பங்கு கோர உரிமை உடையவர் அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து 5ம் பிரதிவாதி தங்கவேலுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றும் அவருடைய மகன் தான் 16 ம் பிரதிவாதி சவீன்குமார் என்றும் அவருக்கு தாவா சொத்துகளில் தலா 1/6 பங்கு பாத்தியம் என்றும் அதில் நான் உரிமை கோர இயலாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சீரங்க கவுண்டரும் தங்கவேலும் 1991- 2000 வரை வழக்கு நடத்தி வந்துள்ள நிலையில் 2008 ல் நான் கிரையம் வாங்கிவிட்டு மேற்படி வழக்கின் தீர்ப்பினை ரத்து செய்ய கோருவது சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய கோரிக்கை காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்துகளில் எவ்வித பாத்தியமும் இல்லை என்பதால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.